உ

கடவுள் துணை

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய

# சோதிட அரிச்சுவடி

(முதற்பாகம்)

இஃது

பாலக்காடு பிரம்மஸ்ரீ

நித்தியானந்த சோதிடரவர்களால்

இயற்றியதை,

மதுரை நகரம்

கவிராஜ-கந்தசாமி பிள்ளையவர்களால்

பார்வையிடப்பெற்று,

சென்னை:

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை

விலை] 1935. [அணா 4.

ரிஜிஸ்டர் காபிரைட்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:— 1867-வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை ஜ. புருஷோத்தம நாயுடுவினால் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்து அச்சிட்டு விற்பனை செய்துக்கொண்டு வந்ததை மேற்படியாரிடம் ரிஜிஸ்டர்சுதந்திரத்தை நாங்கள் கிரயத்திற்கு வாங்கியிருப்பதால், பிறர் இந்நூலை பதிப்பித்தலும் இதை வேறு பாஷையில் மொழி பெயர்த்தலும் இதிற் கண்டிருக்கிற விஷயங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படி அச்சிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

அல்லாமலும் காபிரைட்டை உல்லங்கனம் செய்து குற்றத்திற்கும் ஆளாவார்கள்.

இப்படிக்கு,

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வேங்கடராமய்யர் தெரு. ஜி. டி, சென்னை.

உ

கடவுள் துணை

குருசிஷ்ய சம்பாஷணையாகிய

# சோதிட அரிச்சுவடி

## முதற் பாகம்

சுந்தரகணேசர் துணை

உலகினில் பிறந்தோருக்கு உற்றநல் சுகதுக்கங்கள்
நிலமிசை காண்பதற்கு நீடியஜோதிடத்தின் [லாம்
பலகலை ஆராய்ந்தோர்ந்து பலன்சொல்லும்விபரமெல்
கலவர மில்லாதோத கணபதி துணைசெய்வாரே.

(இ-ள்.) பகவானால் சிருஷ்டிக்கப்பட்ட பூலோகத்தில் பிறந்த மனிதர்களின் வாழ்நாள் வரையினும் அனுபவிக்கும் சுகதுக்கங்களை ஜோதிடத்தில் கவனித்துப் பலன்களை விபரமாய்ச் சொல்வதற்கு கணேசமூர்த்தி துணையாயிருப்பார்.

சீஷன்:—சுவாமி குருநாதரே! உலகத்தில் பிறந்த மனிதர்களின் சுகதுக்கங்களை கவனிப்பது எவ்விதம்?

குரு:—அவரவர்கள்பிறந்த இராசி லக்கினத்தைப் பார்த்தால், இன்னின்ன கிரகம் இன்னின்ன வீட்டிலிருந்தால், இன்னின்ன விதமாய் பலன் நடக்குமென்று சொன்னால், அனுபவத்தில் சரியாயிருக்கும்

சீஷன்:—அதன் விபர மெவ்விதம்?

குரு:—முதலாவது, இலக்கின நிச்சயப்படுத்திக் கொள்ளும் விபரத்தை கவனிக்க வேண்டும். இதன் விபர மெவ்விதமெனில்,

| | | | |
|---|---|---|---|
| பங்குனி<br>மீனம்<br>$4\frac{1}{4}$ | சித்திரை<br>மேஷம்<br>$4\frac{1}{4}$ | வைகாசி<br>ரிஷிபம்<br>$4\frac{3}{4}$ | ஆனி<br>மிதுனம்<br>$5\frac{1}{4}$ |
| மாசி<br>கும்பம்<br>$4\frac{3}{4}$ | அவ்விதமாய் இரவு<br>பகல்<br>இங்கிலீஷ்<br>24-மணி நேரத்தில்<br>60நாழிகைக்கும்<br>12-இலக்கினம்<br>நடக்கும் | | ஆடி<br>கடகம்<br>$5\frac{1}{2}$ |
| தை<br>மகரம்<br>$5\frac{1}{4}$ | | | ஆவணி<br>சிம்மம்<br>$5\frac{1}{4}$ |
| மார்கழி<br>தனுசு<br>$5\frac{1}{2}$ | கார்த்திகை<br>விருச்சிகம்<br>$5\frac{1}{4}$ | ஐப்பசி<br>துலாம்<br>5 | புரட்டாசி<br>கன்னி<br>5 |

சீஷன்:—இதன் விபர மெவ்விதம்?

குரு:—சித்திரை மாதத்தின் முதல் தேதியில் பகல் 3-மணிக்கு குழந்தை பிறந்தால், அதற்கு ஜனன லக்கின விபர மெவ்விதமெனில், அன்றைய தினத்தின் இங்கிலீஷ் 10 - மணியின் கணக்கைப் போல காலே 6-மணியிலிருந்து பகல் 3-மணிக்கு தமிழ் கணக்கில் சூரியஉதயாதி $22\frac{1}{2}$-நாழிகையாகும். அந்த சமயத்தில் நடக்கும் இலக்கின மென்ன வெனில், மேற் குறிப்பித்த சக்கரத்திற் காட்டிய விதமே கவனிக்கும் விபரம் எவ்விதமெனில்,

| | |
|---|---|
| மேஷம் | $4\frac{1}{4}$ |
| ரிஷபம் | $4\frac{1}{4}$ |
| மிதுனம் | $5\frac{1}{4}$ |
| கடகம் | $5\frac{1}{2}$ |
| சிங்கம் | $5\frac{1}{4}$ |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | செ | |
| | | | ராகு |
| கே | | | லக் |
| குரு | சந் | சனி | |

ஆக மொத்தம் 25-நாழிகை சிம்மலக்கினம் உதயமாகி 2-நாழிகை இருப்பு.

இவ்விதமாக அன்றைய தினத்தின் லக்கினத்தை யனுசரித்து அச்சமயம் அந்தந்த வீட்டிலிருக்கும் கிரகங்களின் பலன்களைச் சொல்லவேண்டும்.

சீஷன்:—குருநாதரே! தாங்கள் சொன்ன இலக்கினமுதல் மற்ற வீட்டில் கிரகமிருந்தால் அந்த ஸ்தானத்திற்கு எந்தெந்த லக்கினமென்று சொல்லுவது?

குரு:—பிறந்த நாழிகையில் அமைவதுதான் ஜனன லக்கினம்; மற்றவை கவனிப்ப தெவ்விதமெனில்,

லக்கினம்:—உயிர் லக்கினம்

2-வது:—குடும்பஸ்தானம், வாக்குஸ்தானம்
3-வது:—சகோதரஸ்தானம், தீரஸ்தானம்
4-வது:—மாதுருஸ்தானம், சுகஸ்தானம்
5-வது:—புத்திரஸ்தானம்
6-வது:—சத்துருஸ்தானம்
7-வது:—களத்திரஸ்தானம்
8-வது:—ஆயுள்ஸ்தானம
9-வது:—பிதுர்ஸ்தானம், பாக்கியஸ்தானம்

10-வது:—ஜீவனஸ்தானம்
11-வது:—மூத்தசகோதரஸ்தானம், இலாபஸ்தானம்
12-வது:—சயனஸ்தானம், விரயஸ்தானம்

இவ்விதமாய்ச் சொல்லவேண்டியது. இந்த ஸ்தானங்களில் கிரகங்களிருந்தால் அவரவர்கட் கிசைந்த நட்பாக்ஷி, யுச்சம்பகை நீசமென்னும் பலத்திற்குரிய விதமே சுபாசுப பலனைத் தருவார்கள்.

சீஷன்:—சுவாமி! கிரகங்களின் நட்பாக்ஷி, உச்சம் பகை நீசமென்பதை பிறகு கவனிக்கின்றேன். ராசிகளின் சராசரி, ஸ்திரராசி, உபயராசி யென்பதை அனுக்கிரகம் செய்யவேண்டும் சுவாமி!

குரு:—சரி; அவ்விபரம் சொல்லுகிறேன் கவனிப்பாய்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் உபயராசி | மேஷம் சரராசி | ரிஷபம் ஸ்திரராசி | மிதுனம் உபயராசி |
| கும்பம் ஸ்திர ராசி | இல்விதமான இராசி வீட்டிலிருக்கும் | | கடகம் சரராசி |
| மகரம் சரராசி | கிரகநிலையைக்கண்டு பலன் சொல்லவும். | | சிங்கம் ஸ்திரராசி |
| தனுசு உபயராசி | விருச்சிக ஸ்திரராசி | துலாம் சரராசி | கன்னி உபயராசி |

சீஷன்:—சுவாமி! தமது அனுக்கிரகத்தின்படியே நவக்கிரகங்களிருக்கும் 12-இராசிகளில் சரம்; ஸ்திரம், உபயமென்பதைக் கவனித்துக் கொண்டேன். ஆனல், இராசி யென்பது என்ன?

குரு—சந்திரனிருக்கும் ஸ்தானமே ராசியாகும்

சீஷன்:—அதன் விபரத்தையும் திருவருள் புரிவீர் சுவாமி.

குரு:—சரி! அவ்விதமே உபதேசிக்கின்றேன் கவனிப்பாய். குழந்தை பிறந்த நாளின் கிழமையில் எந்த நக்ஷத்திர மிருக்கின்றதோ அந்த நக்ஷத்திரத்தில் சந்திரனிருப்பதுதான் இராசியாகும்.

சீஷன்:—இவ்விசேஷத்தை விபரமாய்ப் புகல்வீர் குருநாதா.

குரு:—அடியிற் குறிப்பிக்கும் சக்கரத்தைப் பார்,

| | | | |
|---|---|---|---|
| பூரட்டாதி-$\frac{1}{4}$<br>உத்திராட்டாதி-1 ரேவதி-1<br>மீனராசி | அஸ்வனி-1<br>பரணி-1<br>கிர்திகை-$\frac{3}{4}$<br>மேஷராசி | கிர்திகை-$\frac{3}{4}$<br>ரோகணி-1<br>மிருகசீட-$\frac{1}{2}$<br>ரிஷபராசி | மிருகசீரி-$\frac{1}{2}$<br>திருவாதிரை<br>புனர்பூசம்-$\frac{3}{4}$<br>மிதுன ராசி |
| அவிட்டம்-$\frac{1}{2}$<br>சதயம்-1<br>பூரட்டாதி-$\frac{3}{4}$<br>கும்பராசி | இவ்விதமாய் அந்தந்த தினத்தில் பஞ்சாங்கத்தில் தோற்றும்நக்ஷத்திரங்களில் சந்திரன் சஞ்சரிப்பதேஇராசியாகும். ஆனல் ஒவ்வொரு இராசியிலும் 2$\frac{1}{4}$-நாள் வரையிலும் சந்திரன் நிற்பதால் அதை நாமே கவனித்து ஜாதகம் எழுதும்போது போட்டுக் கொள்ள வேண்டியது | | புனர்பூசம்-$\frac{1}{4}$<br>பூசம்-1<br>ஆயிலியம்-1<br>கடகராசி |
| உத்திராடம்-$\frac{3}{4}$<br>திருவோண-1<br>அவிட்டம்-$\frac{1}{2}$<br>மகரராசி | | | மகம்-1<br>பூரம்-1<br>உத்திரம்-கால்<br>சிங்கராசி |
| மூலம்-1<br>பூராடம்-1<br>உத்திராடம்-$\frac{1}{4}$<br>தனுசுராசி | விசாகம்-$\frac{1}{4}$<br>அனுஷம்-1<br>கேட்டை-1<br>விருச்சிக ராசி | சித்திரை-$\frac{1}{2}$<br>சுவாதி-1<br>விசாகம்-$\frac{3}{4}$<br>துலாராசி | உத்திரம்-கால்<br>அஸ்தம்-1<br>சித்திரை-$\frac{1}{2}$<br>கன்யாராசி |

சீஷன்:—ஒவ்வொரு வீட்டிலும் கிரகங்கள் சஞ்சரிக்கும் காலத்தின் விபரமெப்படி?

குரு:—எனது அன்பான சிஷ்யனே! இந்த பனிரெண்டு ராசியிலும், 9-கிரகங்களும் இருக்கும் கால நிர்ணயத்தைச் சொல்லுகிறேன் கவனிப்பாய். அதெவ்விதமென்றால்: மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் யென்னும் 12-இராசியிலும் கிரகங்கள் இருக்கும் காலநிர்ணயம் எவ்விதமெனில்,

ஒவ்வொரு இராசியிலும் கிரகங்கள் நிற்குங்காலம்.

| | |
|---|---|
| சூரியன் 1-மாதம் | சுக்கிரன் 1-மாதம் |
| சந்திரன் 2-கால்-நாள் | சனி $2\frac{1}{2}$-வருஷம் |
| செவ்வாய் $1\frac{1}{2}$-மாதம் | இராகு $1\frac{1}{2}$-வருஷம் |
| புதன் 1-மாதம் | கேது $1\frac{1}{2}$-வருஷம் [கள் |
| குரு 1-வருஷம் | இவ்விதமாய் சஞ்சரிப்பார் |

சீஷன்:—சுவாமி! கவனித்துக் கொண்டேன். ஆனால், நவக்கிரகங்கனின் பார்வை ஸ்தானத்தின் விபரத்தைச் சொல்வீரென்று கோருகிறேன்.

குரு:—சிஷ்யா! சூரியனுக்கு 3-7-ம், சந்திரனுக்கு 7-ம், செவ்வாய்க்கு 4-7-8-ம், புதனுக்கு 7-ம், குருவுக்கு5-7-9-ம், சுக்கிரனுக்கு7-ம், சனிக்கு, 3-7-10-ம், இராகுவுக்கு 3-7-12-ம், கேதுவுக்கு 3-7-12-ம், பார்வை ஸ்தானமாகும். இவர்களில் குரு, புதன், சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன் பார்வையினால் சுபமாகும். மற்றவர்கள் பார்வையானால் அசுபமாகும்.

சிஷன்:—சுவாமி! பிள்ளை பிறந்தால் அதற்கு நாமகரணம் சூட்டுதல்: பெயரிடும் படியானவை எவ் விதம்?

குரு:—அடியில் குறிப்பித்த விதமாக எழுத் துக்களில் முதலெழுத்தைக்கொண்டு பெயரிடுவது. முன் சொன்னபடியே குழந்தை பிறந்த தினத்தின் வேளையில் எந்த நக்ஷத்திரப் பாகம் வருகிறதோ அந் தப்பாகத்தின் முதலெழுத்தையே குறிப்பித்து பெய ரிட்டால் அந்தந்த இராசியைக்குறிப்பிக்கும். எப்படி யெனில், அந்தக் குழந்தை பிறந்தவேளையில் அஸ்த நக்ஷத்திரம் முதற்பாதமானல் பு-என்னும் அக்ஷரம் வரும் அச்சமயம், ஆண்குழந்தையானல், புருஷோத் தமன் யென்றும் பெண்குழந்தை யானல், புனிதவதி யென்றும் பெயரிடவேண்டும். அப்போது அஸ்த நக்ஷத்திரத்தில் சந்திரன் சஞ்சரிப்பதால் கன்னியா ராசியாகும், அதனை மேற்குறிப்பித்த பெயருடைய வர்களின் ஜன்ம ராசியாகக்கொண்டு பனிரெண்டு ராசியிலிருக்கும் கிரகங்களால் நடக்கும் பலன்களைச் சொன்னல் அனுபவத்தில் சரியாயிருக்கும். அதன் விபரம் எவ்விதமெனில்:—

## நாமநக்ஷத்திர எழுத்துக்களின் விபரம்

| நக்ஷத்திரங்கள் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அஸ்வனி | சு | சே | சோ | ல |
| பரணி | வி | லு | லெ | லோ |
| கிருத்திகை | அ | இ | உ | எ |
| ரோகணி | ஒ | வ | வி | வு |
| மிருகசீரிடம் | வே | ஓ | கா | கி |
| திருவாதிரை | கு | க | ங | ச |
| புனர்பூசம் | கே | கோ | ஹ | ஹி |
| பூசம் | ஹு | ஹே | ஹோ | ட |
| ஆயில்யம் | டி | டு | டெ | டொ |
| மகம் | ம | மி | மு | மெ |
| பூரம் | மோ | டா | டி | டு |
| உத்திரம் | டே | டோ | பா | பி |
| அஸ்தம் | பு | ஷ | ண | ட |
| சித்திரை | போ | பா | ரா | ரி |
| சுவாதி | ரு | ரே | ரோ | த |
| விசாகம் | தி | து | தெ | தொ |
| அனுஷம் | நா | நீ | நு | நெ |
| கேட்டை | நொ | ப | பி | பு |
| மூலம் | ஏ | யோ | பா | பு |
| பூராடம் | பூ | தா | ப | ட |
| உத்திராடம் | பே | பா | ஜ | ஜி |
| திருவோணம் | க | கி | கு | கே |
| அவிட்டம் | கி | கு | கெ | கொ |
| சதயம் | கோ | ஸ | ஸி | ஸு |
| பூரட்டாதி | ஸே | ஸோ | த | தி |
| உத்திரட்டாதி | து | த | ஞ | தெ |
| ரேவதி | தே | தோ | ச | சி |

இவ்விதமாய் அந்தந்த நாளில் பிறந்தால் அந்தந்த நாளில் நடக்கும் நக்ஷத்திரங்களில் எத்தனை நாழிகையில் குழந்தை பிறந்தாலும், அந்தந்த நக்ஷத்திரங்களின் பாதசாரத்தின்படியே வந்த எழுத்தை முதலெழுத்தா யமைத்துப் பெயரிட்டால் அதில் ஜன்மராசியாக சந்திரனிருந்த ஸ்தானத்தைக் குறிப்பிக்கும். இதைப் பார்த்துதான் இராசி பலனைச்சொன்னால் அனுபவத்தில் சரியாயிருக்கும்.

நவக்கிரகங்களின் ஆக்ஷிவீடு அறியும் விபரம்

விருத்தம்

மேஷந்தேள்குஜனுக்காக்ஷி மிதுனம்பெண்புதனுக்கா
தேசுலாநண்டிற்சந்த்ரன் தினகரன்சிம்மத்தாக்ஷி [க்ஷி
மாசிலாதனுசும்மீனம் மறையவர்காக்ஷிபாகும்
பேசியரிஷபங்கோணும் புகர்தனக்காக்ஷியாமே.

இ-ள். சூரியபகவானுக்கு சிம்மராசி ஆக்ஷியாகும். சந்திரபகவானுக்கு கடகராசி ஆக்ஷியாகும், செவ்வாய் பகவானுக்கு மேஷராசியும் விருச்சிக ராசியும் ஆக்ஷிவீடாகும். புதபகவானுக்கு மிதுனராசியும், கன்னியாராசியும் ஆக்ஷியாகும், குருபகவானுக்கு தனுசுராசியும், மீனராசியும் ஆக்ஷியாகும். சுக்கிரபகவானுக்கு ரிஷபராசியும், துலாராசியும் ஆக்ஷியாகும்.

விருத்தம்

நன்மைசேர் சனீஸ்வரர்க்கு நவில்கும்பம் மகரம் ஆக்ஷி, அன்புசேர் ராகுகேதுக் காக்ஷிவீடில்லாதாலே, இன்பமாயெந்த வீட்டில் இருப்பினும் அதுவே ஆக்ஷி, வன்மையா யுந்தனுக்கு வழுத்தினேன் மனதில் வையே.

இ-ள். சனிபகவானுக்கு மகரராசியும், கும்பராசியும் ஆக்ஷிவீடாகும். ஆனால், சப்த கிரகங்களுக்கும் பனிரெண்டு இராசி வீடுகளும் சொந்தமாய் விட்டதாலும் அப்பால் வந்த இராகுகேதுக்களுக்கு இராசி வீடு காலியாயில்லாதபடியால் அவ்விருவரும் அவர்களின் அதிகாரஞ் செலுத்துதற்கு வருகிற வீடுகள் ஒவ்வொன்றும் அவர்களிருவருக்கும் அவர்களுக்குரிய சொந்தவீடாய் மதித்து அந்த வீட்டிற்குடைய இராசிநாதன் கொடுக்கும் பலனையே அவர்கள் கொடுப்பார்களாம்.

சிஷன்:—சுவாமி! தாங்கள் தெரிவித்தவிதமே அந்தந்த கிரகங்கள் தமது ஆக்ஷி வீட்டி லிருந்தால் எவ்வெவ் விதமாகிய பலனைத் தருவார்கள்?

குரு:—எனது அன்பான சிஷ்யா! உன் மனம் போலவே சொல்லுகிறேன் கவனிப்பாய்.

விருத்தம்

ஆக்ஷிவீட்டில்நின்றாலும் அந்தந்தகிரகமெல்லாம்
மாக்ஷியாய்சுபாசுபங்கள் மனிதரையடையச்செய்வார்
சூக்ஷியாயுந்தனுக்கு சொல்லியவிபரமெல்லாம் [யே
மாக்ஷியாய்மனதில்வைத்து கவனித்துக்கொள்ளுவா

இ-ள். கிரகங்கள் தமது சொந்த வீட்டி லிருந்தாலும் தாம் நின்ற ஸ்தானபலனையே தருவார்கள். இந்த மர்ம இரகசியத்தைக் கவனியாமல் கிரகங்கள் தமது சொந்தவீட்டில்வந்து ஆக்ஷிபெற்றிருப்பதால் தமக்கு நல்லபலன் கிடைக்குமென்று மனிதர்கள் சொல்லிக் கொள்வதினால் பிரயோசனமில்லை. அவரவர்கள் இராசிபலனை யனுசரித்துதான் பலனைத்தருவார்கள். இந்த இரகசியத்தைதான் முக்கியமாய் தெரிந்துக் கொள்ளவேண்டும்.

## வருஷங்கள் - 60

பிரபவ
விபவ
சுக்கில
பிரமோதூத
பிரஜோற்பத்தி
ஆங்கிரச
ஸ்ரீமுக
பவ
யுவ
தாது
ஈஸ்வர
வெகுதான்ய
பிரமாதி
விக்ரம
விஷு
சித்திரபானு
சுபானு
தாரண
பார்திப
விய
சர்வசித்து
சர்வதாரி
விரோதி
விக்குருதி
கர
நந்தன
விஜய
ஜய
மன்மத
துன்முகி
ஹேவிளம்பி
விளம்பி
விகாரி
சார்வரி
பிலவ
சுபகிருது
சோபகிருது
குரோதி
விஸ்வாவசு
பராபவ
பிலவங்க
கீலக
சௌமிய
சாதாரண
விரோதிகிருது
பரிதாபி
பிரமாதீச
ஆனந்த
ராக்ஷச
நள
பிங்கள
காளயுத்தி
சித்தாத்திரி
ரௌத்திரி
துன்மதி
துந்துபி
ருத்திரோற்காரி
இரக்தாக்ஷி
குரோதன
அக்ஷய

ஆக 60.

| மாதங்கள் - 12 | கிழமைகள் - 7 | திதிகள் - 15 |
|---|---|---|
| சித்திரை | ஞாயிறு | பிரதமை |
| வைகாசி | திங்கள் | துதியை |
| ஆனி | செவ்வாய் | திரிதியை |
| ஆடி | புதன் | சதுர்த்தி |
| ஆவணி | வியாழன் | பஞ்சமி |
| புரட்டாசி | வெள்ளி | சஷ்டி |
| ஐப்பசி | சனி | சப்தமி |
| கார்த்திகை | | அஷ்டமி |
| மார்கழி | | நவமி |
| தை | | தசமி |
| மாசி | | ஏகாதசி |
| பங்குனி | | துவாதசி |
| | | திரயோதசி |
| | | சதுர்த்தசி |
| | | அமாவாசை [தேய்பிறை |
| | | பௌர்ணமி [வளர்பிறை |
| ஆக 12. | ஆக 7. | ஆக 15. |

இவ்விதமே 15-நாளைக்கு வரும் திதிகள் தேய் பிறையாகும். கடைசி திதியாகிய அமாவாசைக்குப் பிறகு வருகிற திதிகள் வளர்பிறையாகிய அதன் கடைசியில் வருகிற திதிகள் வளர்பிறை யாமென் றறிவாய்.

விருத்தம்

அன்புடனுலகோரெல்லாம் ஆனதோர் சுக்லபக்ஷ, நன்மையாம் தினத்தில்வாய்ந்த நக்ஷத்ர சுபயோகத் தில், பன்னும் வர்த்தகம் உத்தியோகம் பக்ஷமாய்ச் செய்வாரானல், இன்பமும் சுகமும் பாக்கிய இலாப மும் பெறுவார்தானே.

| நக்ஷத்திரங்கள்-27 | யோகங்கள்-27 | கரணங்கள்-11 |
|---|---|---|
| அஸ்வனி | விஷ்கம்பம் | பவம் |
| பரணி | பிரீதி | |
| கிர்த்திகை | ஆயுஷ்மான் | பாலவம் |
| ரோகணி | சௌபாக்யம் | |
| மிருகசீரிடம் | சோபனம் | கௌலவம் |
| திருவாதிரை | அதிகண்டம் | |
| புனர்பூசம் | சகர்மம் | தைதுலே |
| பூசம் | திருதி | |
| ஆயில்யம் | சூலம் | கரசை |
| மகம் | கண்டம் | |
| பூரம் | விருத்தி | வணிசை |
| உத்திரம் | துருவம் | |
| அஸ்தம் | வியாகாதம் | பத்திரை |
| சித்திரை | ஹாஷ்ணம் | |
| சுவாதி | வச்சிரம் | சகுனி |
| விசாகம் | சித்தி | |
| அனுஷம் | விதிபாதம் | சதுஷ்பாதம் |
| கேட்டை | வரியான் | |
| மூலம் | பரிகம் | நாகவம் |
| பூராடம் | சிவம் | |
| உத்திரம் | சித்தம் | கிமஸ்துக்கினம் |
| திருவோணம் | சாத்தியம் | |
| அவிட்டம் | சுபம் | |
| தசயம் | சுப்பிரம் | |
| பூரட்டாதி | பிரமம் | |
| உத்திரட்டாதி | மாகேந்திரம் | |
| ரேவதி | வைதிருதி | |
| ஆக 27. | ஆக 27. | ஆக 11. |

சிஷ்யன்:—குருஸ்வாமி! தாங்கள் அடியேனுக்கு இவ்வளவு அன்புகூர்ந்து தெரிவித்தவைகளை முழுதும் கவனித்துணர்ந்தேன் ஆனால், நவக்கிரக காரகாதிபதிகளின் விபரம் சொல்வீர்.

குரு:—சரி! சொல்லுகின்றேன் கவனிப்பாய்.

## நவக்கிரக காரகாதிபதிகள்

சூரியன்-பிதுர்க்காரகன்
சந்திரன்-மாதுர்க்காரகன்
செவ்வாய்-சகோதரகாரகன்
புதன்-வித்யாகாரகன்
வியாழன்-புத்ரகாரகன்
சுக்கிரன்-கடத்திரகாரகன்
சனி-ஆயுள்காரகன்

இராகு } பிதுர்மாதுர்காரன்

கேது } மோக்ஷகாரகன்
மாதாமாதுர்காரகன்
ஞானகாரகன்

இவ்விதமாய் கவனித்துக்கொண்டு அவரவர்கள் ஜாதகலக்ஷணத்தின்படியே பலாபலன்களைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

சிஷன்:—சுவாமி! ஒவ்வொரு தினத்திலும் அமிர்தயோகம் சித்தயோகம் கவனிப்ப தெவ்விதம்?

குரு:—ஒவ்வொரு தினத்திலும் வரும் கிழமையில் வருகிற நக்ஷத்திரங்களின்படியே அமிர்தாதி சித்தயோக தினங்கள் அமையும் அந்த சுபதினங்களில் தான் எவ்விதமான சுபகாரியங்களையும் செய்யவேண்டும். ஆனால், மரணயோகம் வரும்படியான தினங்களில் சுபகாரியங்களை ஆரம்பஞ் செய்யலாகாது.

சிஷன்:—அதை அடியேனுக்கு விபரமாய்ச் சொல்லுவீர் சுவாமி.

குரு:—சொல்லுகின்றேன் கவனிப்பாய்.

# அமிர்தயோகம், சித்தயோகம், மரணயோகம்

| நட்சத்திரம். | ஞா. | திங். | செ. | புத. | வி. | வெ. | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| அசுவனி | சித்த | சித்த | சித்த | மர | அமி | அமி | சித்த |
| பரணி [கை | பிர | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த |
| கிருத்தி | சித்த | மர | சித்த | அமி | மர | சித்த | அமி |
| ரோகணி | சித்த | அமி | அமி | சித்த | மர | மர | சித்த |
| மிருகசீரிட | சித்த | சித்த | சித்த | சித்த | மர | சித்த | சித்த |
| திருவாதி | சித்த | சித்த | மர | சித்த | மர | சித்த | சித்த |
| புனர்பூசம் | சித்த | அமி | சித்த | சித்த | அமி | சித்த | சித்த |
| பூசம் | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | மர | சித்த |
| ஆயிலியம் | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | மர | மர |
| மகம் | மர | மர | சித்த | சித்த | அமி | மர | அமி |
| பூரம் | சித்த | சித்த | சித்த | அமி | சித்த | சித்த | சித்த |
| உத்திரம் | அமி | சித்த | அமி | அமி | மர | சித்த | மர |
| அஸ்தம் | சித்த | பிர | சித்த | மர | சித்த | அமி | மர |
| சித்திரை | சித்த | அமி | சித்த | சித்த | சித்த | சித்த | மர |
| சுவாதி | சித்த | அமி | சித்த | சித்த | அமி | சித்த | சித்த |
| விசாகம் | மர | மர | மர | சித்த | சித்த | சித்த | சித்த |
| அனுஷம் | மர | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த |
| கேட்டை | மர | சித்த | மர | சித்த | பிர | மர | சித்த |
| மூலம் | அமி | சித்த | அமி | மர | சித்த | அமி | சித்த |
| பூராடம் | சித்த | மர | சித்த | அமி | சித்த | பிர | சித்த |
| உத்திராட | அமி | மர | பிர | அமி | சித்த | சித்த | சித்த |
| திருவோண | அமி | அமி | சித்த | சித்த | சித்த | மர | சித்த |
| அவிட்டம் | மர | சித்த | சித்த | பிர | சித்த | சித்த | சித்த |
| சதயம் | சித்த | சித்த | மர | சித்த | மர | சித்த | அமி |
| பூரட்டாதி | சித்த | சித்த | மர | அமி | சித்த | சித்த | மர |
| உத்ரட்டா | அமி | சித்த | அமி | சித்த | சித்த | சித்த | சித்த |
| ரேவதி [தி | அமி | சித்த | சித்த | மர | சித்த | சித்த | பிர |

அமி - அமிர்தயோகம், சித்த - சித்தயோகம், மர - மரணயோகம, பிர-பிரபாலரிஷ்டம்.

இவ்விதமாய் மேற்குறிப்பித்த தினங்களில் வரும் நக்ஷத்திரங்களின்படியே வருகிற அமிர்தயோகத்தில் எந்தகாரியத்தையும் செய்யலாம். மரணயோகமாயிருக்குந்நாளில் எந்தகாரியத்தையும் செய்யலாகாது.

சீஷன்:—சுவாமி! ஒவ்வொருநாளிலும் சுபவேளை அசுபவேளை யென்னும் விதத்தை இன்னின்னதென்று அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டும்.

குரு:—எனதன்பிற் கிசைந்த பிரியமான சிஷ்யனே! நீ விருப்பத்துடன் கேட்கும் விஷயங்களை யெல்லாம் சுருக்கமாய்ச் சொல்லுகின்றேன் கவனிப்பாய்.

## சீஷன் சொல்வது

### விருத்தம்

ஆசிரியாயென்குருவே நாளில்தோன்றும்
    அசுபதினம்சுபதினத்தின் விபரந்தன்னை
வீசுபுகழென்குருவே அடியேனுக்கு
    விபரமாய்ப் புகல்வீரென்றுமதுபாதம்
மாசிலாமனத்துடனே தியானஞ்செய்து
    மதிசிதறுதுமதுசொல் கவனிக்கின்றேன்
பாசமுடனெந்தனுக்கு உபதேசிப்பீர்
    பாரெங்குமுன்னோர்கள் புகழும்நாதா.

| வாரங்கள் | இராகு காலம் | | குளிகை காலம் | | எமகண்ட காலம் | | அர்த்தப் பிரகணன் | | காலன் | | இரவு எமகண்டன் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேளை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை |
| ஞாயிறு … | 4-30 | 6 | 3 | 4-30 | 12 | 1-30 | 10-30 | 12 | 6 | 7-30 | 6 | 7-30 |
| திங்கள் … | 7-30 | 9 | 1-30 | 3 | 10-30 | 12 | 9 | 10-30 | 3 | 4-30 | 3 | 4-30 |
| செவ்வாய் … | 3 | 4-30 | 12 | 1-30 | 9 | 10-30 | 7-30 | 9 | 1-30 | 3 | 1-30 | 3 |
| புதன் … | 12 | 1-30 | 10-30 | 12 | 7-30 | 9 | 6 | 7-30 | 12 | 1-30 | 12 | 1-30 |
| வியாழம் … | 1-30 | 3 | 9 | 10-30 | 6 | 7-30 | 3 | 4-30 | 10-30 | 12 | 10-30 | 12 |
| வெள்ளி … | 10-30 | 12 | 7-30 | 9 | 3 | 4-30 | 1-30 | 3 | 9 | 10-30 | 9 | 10-30 |
| சனி … | 9 | 10-30 | 6 | 7-30 | 1-30 | 3 | 12 | 1-30 | 7-30 | 9 | 7-30 | 9 |

## சீஷன் சொல்வது

### விருத்தம்

எந்தனுக்கு நன்மனதாய் ஜோதிஷத்தை
எளிதாகத் தாரணியில் உபதேசித்த
சுந்தரஞ்சேர் குணமமைந்த குருவேமாந்தர்
சுற்றத்தா ருடன்விருந்து புசிக்குந்நாளில்
பந்தமுடன் யாத்திரைநாள் சுபாசுபங்கள்
பக்ஷமுறும் ஸ்நானநாள் விபரமெல்லாம்
அந்தமுட னெந்தனுக்கு உபதேசிப்பீர்
ஆசிரிய நின்பாதம் நம்பினேனே.

(இ-ள்.) சுவாமி! தாங்கள் அடியேனுக்குத் தெரி வித்த காலாகாலத்தை கவனித்துக்கொண்டேன். ஆனால், வழிப்பிரயாணஞ் செய்வது, வஸ்திரமுடுத் தல், விருந்துண்ணல் முதலானவைகளுக்கு எந் தெந்த நாள் உபயோகமாகும்.

குரு:—சொல்லுகிறேன் கவனிப்பாய்.

## ஆகாத நக்ஷத்திரங்கள்

### விருத்தம்

ஆதிரைபரணி கிர்த்திகை
ஆயில்யம்முப் பூரங்கேட்டை
தீதுறும் விசாகம்சோதி
சித்திரை மகாமீராறும்
மாதனங் கொண்டார்தாரார்
வழிநடைப் பட்டார்மீளார்
பாய்தனிற் படுத்தோர்தேரார்
பாம்பின்வாய்த் தேரையாமே.

(இ-ள்.) இருபத்தேழு நக்ஷத்திரத்தில் திருவா திரை, பரணி, கிருத்திகை, ஆயில்யம், பூரம், பூரா டம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சுவாதி, சித் திரை, மகம் இந்த 12-நக்ஷத்திரங்கள் கடன் வாங்

கியவர் சமயத்திற்குக் கொடுக்க முடியாது. தேசசஞ் சாரம் செய்வதற்காக பிரயாணப்படுவார் மறுபடியும் திரும்புவதற்குப் பலவிதமாகிய கஷ்டம் சம்பவிக்கும். வியாதியென்று பாய்தனிற் படுத்தவர் சரீர சௌக்கியம் எழுந்து வருவதற்குக் கஷ்டம்.

## கோடி வஸ்திர முடுத்தல்

### விருத்தம்

காரியிலழுக்கதாகும் கதிரவர்பீடைபோகும்
மாரியில்நனையுந்திங்கள் வன்புதன்கந்தையாகும்
வீரியமில்லைசெவ்வாய் வெள்ளியில்மடந்தைசேர்வாள்
கூறியவியாழம்நன்றும் குலவியஆடைசாத்த.

(இ-ள்) சனிக்கிழமைய தினத்தில் புதிய வஸ்திரம் அணிந்தால் சீக்கிரமாய் அழுக்காகும். ஞாயறில் துன்பம் நீங்கும். திங்கட்கிழமைதினம் சதா காலமும் ஜலத்தில் நனைந்தவிதமா யிருக்கும். புதன் கிழமையதினத்தில் புதிய வஸ்திர முடுத்தினுல் சீக்கிரமாய்க் கிழியும். செவ்வாய்க் கிழமைய தினத்தில் புதிய வஸ்திர முடுத்தினுல் அந்த வஸ்திரத்தை உடுத்திருக்கும் வரையில் மனதைரியமில்லாமல் திகிலடைந்து சஞ்சலமா யிருப்பதற்காகும். வெள்ளிக் கிழமையதினத்தில் புதிய வஸ்திர முடுத்தினுல் இலட்சுமிகடாக்ஷ முண்டாகும், வியாழக்கிழமைய தினத்தில் புதிய வஸ்திர முடுத்தினுல் சகலவித நன்மையும் உண்டாகும்.

## விருந்துண்ண

### வெண்பா

வெள்ளிசனிதிங்கள் விருந்துண்ணபுதனுமாம்
கள்ளவியாழங் கசுப்பிக்கும்—கொள்ளகதிர்
தீராபகைகாட்டும் செவ்வாய்தனக்குமே
வாராப்பகையும் வரும்.

(இ-ள்.) புதிதாய் ஒருவர் வீட்டில் விருந்து புசிப்பதாயிருந்தால், வெள்ளி-சனி-திங்கள்-புதன் இந்த நான்கு நாட்களில் உத்தமமாகும். வியாழக்கிழமை மனவெறுப்புண்டாகும். ஞாயிற்றுக்கிழமையானல் தீராப்பகையுண்டாகும். செவ்வாய்க்கிழமையானல் வராத பகையெல்லாம் வரும்.

## ஊர்பிரயாணம் தேசசஞ்சாரம்

## போவதற்கு

### எண்சீரடி விருத்தம்

திங்களொடு சனியிரண்டுங் கிழக்கேயாக
தெற்குமுகம் போகவென்றல் வியாழமாகா
தங்குகின்ற விடமிருந்து மேற்கேபோக
தம்பியடா வெள்ளிரவி ஆகாதாகா
அங்கெனவே வடக்குமுகம் பிரயாணந்தான்
அப்பனே செவ்வாயும் புதனுமாகா
இங்கிவைகள் சிவனர்கைச் சூலமாகும்
ஏற்கநாள் போகவென்றல் சூக்ஷங்கேளே.

(இ-ள்.) ஊர்ப்பிரயாணம் தேசசஞ்சார யாத்திரை வாசியாய்ப் போக நினைப்பவர்கள், சனி திங்கட்கிழமைய தினத்தில் வடக்குப்பக்கம் போகலாகாது. வியாழக்கிழமையில் தெற்கே போகலாகாது. வெள்ளிகிழமைய தினமும், ஞாயிற்றுக்கிழமை தினமும் மேற்கே போகல்ாகாது. செவ்வாய்க்கிழமைய தினமும், புதன்கிழமையதினமும் வடக்கே போகலாகாது. ஏனெனில்: அந்தக் கிழமையில் அந்தந்த இடத்தில் வாரசூலையா யிருக்கும்.

## வாரசூலை சக்கரம்




## அவசியமாய்ப் போகவேணுமானால்

வெண்பா

வடக்குதயம் சென்றதுகால் வாழ்கிழக் கோடுச்சி
அடுக்குநமன் திசைக்கோடந்தி—கொடகீழ்
நடுராவிற் சென்றாலே நாள்பார்க்க வேண்டாங்காண்
வடுவில்லா தென்றே மகிழ்.

(இ-ள்.) வாரசூலையா யிருக்கும் திசைமார்க்கமாய் போகக்கூடாததாகையால், அவசியமாய்ப் போகவேண்டியதா யிருந்தால், சூரியோதயத்தில் வடக்கிலும், சூரியன் உச்சியில் வரும் சரியான மத்தியானத்தில் கிழக்கிலும், சூரியன் அஸ்தமயமான சாயங்கால வேளையில் தெற்கிலும், நடுராத்திரியில் மேற்குமாகவும் போனால் யாதொரு பயங்கரமுமில்லை. அந்தந்த சமயங்களில் அந்தந்த ஸ்தானத்தில் வாரசூலை கிடையாது.

சீஷன்:—சுவாமி! எண்ணெயிட்டு தலை முழுகும் நாளின் பயனெனவை?

## எண்ணெய் ஸ்நானத்திற்குரிய நாள்

### எண்சீர் விருத்தம்

அருக்கனெண்ணெய் அழகழிக்கும்
அணியாதிங்க ளாகாது
திருக்கருஞ்செவ்வா யுயிர்போக்கும்
செய்யபுதனிற் பொருளுண்டாம்
கருத்தையழிக்கும் கவின்வியாழம்
கைப்பொருள்போக்குங் கனவெள்ளி
பொருத்தமுண்டாம் சனியெண்ணெய்
பேணல்முழுக வல்லவரே.

(இ-ள்.) எண்ணெய் ஸ்நானஞ் செய்வோர்களுக்கு ஞாயிற்றுக் கிழமையில் அழகுபோகும், திங்கட் கிழமையில் மனசஞ்சலமுண்டாகும். செவ்வாய்க் கிழமை சரீர அசௌக்கியமும் பயங்கரமுந் தோற்றும். புதன் கிழமையில் திரவியலாபங் கிடைக்கும். வியாழக் கிழமையில் மனவிசார முண்டாகும். வெள்ளிக்கிழமையில் சரீராரோக்கியமும் வல்லமையும் பொருந்தி யிருக்கும். சனிக்கிழமையில் ஆயுள் விர்த்தியுண்டாம்.

### விருத்தம்

ஜெயாபஜெயம்காண்பதற்கு ராசிலக்னம்
திசாபுத்திகிரகங்கள் நோக்கங்கண்டு
நயமாகத்தரணியோர் புகழ்ந்துரைக்க
நடப்பதுதானுத்தமமென் றெண்ணவேண்டும்.

குரு:—எனது அன்பார்ந்த சிஷ்யா! நீ வினவியதும் சரியான கேள்விதான். யான் செல்வத்தைக் கவனிப்பாய்.

## திசாநாதர்கள் பொருந்திய நக்ஷத்திரங்கள்

| | |
|---|---|
| கிர்த்திகை<br>உத்திரம்<br>உத்திராடம் | இம்மூன்றும் சூரிய திசை ௵-6. |
| ரோகணி<br>அஸ்தம்<br>திருவோணம் | இம்மூன்றும் சந்திர திசை ௵-10. |
| மிருகசீரிடம்<br>மித்திரை<br>அவிட்டம் | இம்மூன்றும் செவ்வாய் திசை ௵7. |
| திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | இம்மூன்றும் இராகுதிசை ௵-18. |
| புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | இம்மூன்றும் குருதிசை ௵ 16. |
| பூசம்<br>அனுஷம்<br>உத்ரட்டாதி | இம்மூன்றும் சனிதிசை ௵-19. |
| ஆயிலியம்<br>கேட்டை<br>ரேவதி | இம்மூன்றும் புதன் திசை ௵-17. |

அஸ்வனி
மகம்
மூலம்
} இம்மூன்றும் கேதுதிசை வரு-7.

பரணி
பூரம்
பூராடம்
} இம்மூன்றும் சுக்கிரதிசை வரு-20.

ஆகமொத்தம் நக்ஷத்திரங்கள் 27-க்கும் நவக்கிரக திசாவருஷம் 120-ஆக பொருந்தும்.

சிஷ்யன்:—சுவாமி! திசாநாதர்களின் வருஷாதிகளில் புத்திநாதர்களிருக்கும் கால நிர்ணயத்தையும் அடியேனுக்கு விபரமாய்ச் சொல்வீர்.

## குரு சொல்வது

### எண்சீரடி யாசிரிய விருத்தம்

அன்பான சிஷ்யாகேளுந்தனுக்கு
அறிவிப்பேன் திசாபுத்தி விபரந்தன்னை
உன்மன திலிதைநிறுத்து கணிதமெல்லாம்
ஊக்கமுடன் கவனித்துப் பலனுரைப்பார்
ஒன்பதுபேர் திசைகளிலும் புத்திநாதர்
ஒவ்வொருவராகவந்து மனிதருக்கு
நன்மைதுன்மைபலனைந்துங் கொடுப்பதெல்லாம்
நலமுடனேசொல்லுகிறேன் கவனிப்பாயே.

(இ-ள் எனது அன்பார்ந்த சிஷ்யா! நவக்கிரகங்களின் திசைகளில் அந்த ஒன்பது கிரகங்களுமே ஒவ்வொருவராய் புத்திநாதர்களாக வந்து மனிதர்கட்குக் கால நிர்ணயத்தின் படியே சுபாசுபா பலன்

களைக் கொடுக்கும் விசேஷத்தைச் சொல்லுகிறேன். உனது மனதை ஓரிடத்திலேயே நிறுத்தி கவனமாய்க் கேட்பாய்.

## சூரியதிசை 6-வருஷத்திற்கும் புத்தி,நாதர்களிருக்கும் காலநிர்ணயமும் பலாபலன்களும்

### சூரியதிசையில் சூரியபுத்தி 3-மாதம் 18-நாள்

சூரியன் சுபக்கிரகங்கள் சேர்க்கை அல்லது பார்வையா யிருந்தால் சுப மங்களகரமாகவும், சவுக்கியமாகவு மிருக்கும். ஆனால், சனி-ராகு-கேது பார்வை பெற்றாலும், சம்பந்தமா யிருந்தாலும் பலவிதமான துக்கமுங் கஷ்டமும் பிதுர்வர்க்கத்தில் சூதகமும் உண்டாகும்.

### சூரியதிசையில் சந்திரபுத்தி 6-மாதம்

சந்திரன் கேந்திர திரிகோண வாக்குஸ்தானங்களிலிருந்தால் வித்யாலாபம், குடும்பத்தில் சந்தோஷம் திரவியலாபம், பெரியோர்கள் பிரபுக்கள் சேர்க்கை வெற்றியுண்டாகும். ஆனால், சந்திரன் 3, 6, 8, 12-மிடங்களிலிருந்தால் வருமையும் கஷ்டமு முண்டாகும்.

### சூரியதிசையில் செவ்வாய்புத்தி 4-மாதம் 6-நாள்

செவ்வாய் கேந்திராதிபதியாய் சுபக்கிரகங்கள் பார்வைபெற்றாலும் சுபக்ரகங்கள் சம்மந்தமானாலும்

காணி, பூமி, வீடு வாங்குதல், திரவியலாபம், கீர்த்தியும் உண்டாகும். ஆனால், சனி-ராகு-கேதுவுடன் சேர்ந்து செவ்வாய் கோண திரிகோண விரய ஸ்தானத்தி லிருந்தால் பலவிதமான நஷ்டமும், சஞ்சலமும், கலகமும், கவலையும், கஷ்டமும் உண்டாகும்.

## சூரியதிசையில் இராகுபுத்தி
## 10-மாதம் 24-நாள்

இராகுபகவான் கேந்திராதிபதியாய் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரராசி லிருந்தால் திரவியலாபம் கிடைக்கும். விரயஸ்தானத்தி லிருந்தால் வறுமையும் துன்பமும் உண்டாகும்.

## சூரியதிசையில் குருபுத்தி
## 9-மாதம் 18-நாள்

குருபகவான் இலக்கினம், வாக்குஸ்தானம், கோண திரிகோண லாபஸ்தானத்தி லிருந்தால் வித்தியாலாபம், புத்திரலாபம், வியாபாரவிர்த்தி, திரவியலாபம், பந்து கூட்டமும் உண்டாகும். ஆனால், குருபகவான் 3, 6, -, 12-ம் ஸ்தானத்தி லிருந்து, சனி, ராகு, கேது பார்வை பெற்றாலும், சம்பந்தமானாலும் பலவித கலகமும், வியாதியும், வறுமையும், கஷ்டமும், கவலையும் உண்டாகும்.

## சூரியதிசையில் சனிபுத்தி
## 11-மாதம் 12-நாள்

சனிபகவான் கேந்திராதிபதியாய் நட்பு, ஆட்சி, உச்ச ஸ்தானத்திலிருந்து சுபக்கிரகங்கள் பார்வை

பெற்றிருந்தால், தீரமும், வல்லமையும், உத்தியோக விர்த்தியும் திரவியலாபமும் கிடைக்கும் ஆனால், சனிபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்தால் பலவிதமான கஷ்டமும், கவலையும் வறுமையும் உண்டாகும்.

## சூரியதிசையில் புதன்புத்தி
## 10-மாதம் 6-நாள்

புதன் இலக்கின வாக்குஸ்தான திரிகோண ஸ்தானத்திலிருந்தால் திரவியலாபம், வித்யாலாபம், கீர்த்தியும் உண்டாகும் ஆனால், புதன் 3,6,8, 12-ம் இராசியிலிருந்தால் துக்கமுங், சோம்பலும், கஷ்டமும், கலகமும், வறுமையும் உண்டாகும்.

## சூரியதிசையில் கேதுபுத்தி
## 4-மாதம் 6-நாள்

கேதுபகவான் சுபக்ஷேத்திரத்திலிருந்து குரு சுக்கிரன் பார்வை பெற்றால் கல்வியும், ஞானமும் கீர்த்தியுமுண்டாகும். ஆனால், சூரியன், சனி, செவ்வாய் பார்வை பெற்றால் பலவிதமான கஷ்டமும், வறுமையும், கவலையும் நேரிட்டு தேசசஞ்சாரியாயலையச் செய்யும்.

## சூரியதிசையில் சுக்கிரபுத்தி 1-வருஷம்

சுக்கிரன் கேந்திர திரிகோணம், இலக்கினம் வாக்குஸ்தானத்தி லிருந்தால், கல்வியும், வித்தையும், புத்தியுமுண்டாகும். சுக்கிரன் 3, 6, 8, 12-ம் ஸ்தானத்திலிருந்து சனி, செவ்வாய், ராகு, கேது பார்வைபெற்றால், பலவிதமான வியாதியினால் மெலிந்து கஷ்டப்படுவார்கள்.

சிஷ்யன்:—குருநாதா! தாங்கள் புகன்றவையனைத்தும் கவனித்துக்கொண்டேன். ஆனால், சந்திரதிசையில் வரும் ஒவ்வொரு புத்திநாதரின் பலன்களையும் அடியேனுக்குச் சொல்லுவீர் சுவாமி.

குரு:—அப்படியே சொல்லுகின்றேன் கவனிப்பாய்,

## சந்திரதிசையில் சந்திரன்புத்தி 10-மாதம்

சந்திரன் இலக்கினம் வாக்குஸ்தானம் கேந்திர திரிகோணத்திலிருந்தால் விசேஷநற்பலலும் வித்தியாபி விர்த்தியும், உத்யோக விர்த்தியும், திரவிய லாபமும் தருவார். சந்திரன் மறைவு ஸ்தானத்திலிருந்து சனி, ராகு, கேது பார்வைபெற்றாலும், சம்பந்தமானாலும், சீதளம், ஜுரம், மதிமயக்கம், வறுமை, பிணியும் உண்டாகும்.

## சந்திரதிசையில் அங்காரகபுத்தி 7-மாதம்

அங்காரகன் ஆக்ஷி உச்ச நட்பு ஸ்தானங்களிலிருந்து புதன் குரு சுக்கிரன் பார்வைபெற்றால் சுபகரமான நல்ல பலன்களும் சரீரசவுக்கியமும் பந்து மித்திரர் சகாயமும் உண்டாகும். காணி பூமி லாபமும் கிடைக்கும். ஆனால், அங்காரகன் பகை நீச ஸ்தானத்திலிருந்து சனி-ராகு-கேது பார்வை பெற்றால் உஷ்ண வியாதியும், கலகமும், சண்டை சச்சரவும், கஷ்டமும் உண்டாகும்.

## சந்திரதிசையில் இராகுபுத்தி 1-வருஷம் 6-மாதம்

இராகு தனக்குறிய சுப ஸ்தானத்திலிருந்து குரு சுக்ரன் புதன் சந்திரன் பார்வைபெற்றால் பலவித நன்

மையும் திரவியலாபமும் கிடைக்கும். ஆனால், இராகு சனி, செவ்வாய் பார்வையானால் பலவிதமான கலகமும் கவலையும் உண்டாகும்.

## சந்திரதிசை குருபுத்தி

## 1-வருஷம் 4-மாதம்

குருபகவான் சந்திரனுக்கு கேந்திர திரிகோணஸ்தானத்திலிருந்தால் புத்திரமித்ரகளத்திர லாபமும் வியாபார விருத்தியும் திரவியலாபமுங் கிடைக்கும். ஆனால், குருபகவான் சந்திரனுக்கு 6-8-12-ம் ஸ்தானத்திருந்தால் பலவிதமான கலகமும் கவலையும் உண்டாகும்.

## சந்திரதிசையில் சனிபுத்தி

## 1-வருஷம் 7-மாதம்

சனிபகவான் கேந்திர ஸ்தானங்களி லிருந்தால் கீர்த்தியும், பெருமையும், வியாபாரவிர்த்தியும், உத்தியோக லாபமுந் திரவிய லாபமும் கிடைக்கும். ஆனால், சந்திரனுக்கு மறைவு ஸ்தானத்தி லிருந்தால் பித்தவியாதியும் கஷ்டமும் கவலையும் உண்டாகும்.

## சந்திரதிசையில் புதன்புத்தி

## 1-வருஷம் 5-மாதம்

புதபகவான் திசாநாதனாகிய சந்திரனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானங்களி லிருந்தால் சரீரசவுக்கியமும், மனோற்சாகமும், சங்கீத பிரியமும், ஸ்திரீசேர்க்கையும், திரவியலாபமும், கிடைக்கும். ஆனால், புதன் பகைநீசஸ்தானத்திலிருந்து சனி,ராகு, கேது பார்வையானால் மனசஞ்சலமும், திகிலும், கவலையும், வறுமையும், கஷ்டமும் உண்டாகும்.

## சந்திரதிசையில் கேதுபுத்தி 7-மாதம்

கேதுபகவான் சந்திரனுக்கு-3-6-11-ம் ஸ்தானத்தி லிருந்து குரு, சுக்கிரன் பார்வையானுல் மாத்திரம் கவலையில்லாமல் ஞானமும் கீர்த்தியும், வித்யாலாப மும் பகவத் பக்தியானந்தமும் பொருந்தியிருக்கும்.

## சந்திரதிசையில் சுக்கிரபுத்தி 1-வருஷம் 8-மாதம்

சுக்கிரன் ஆக்ஷி உச்ச நட்பு ஸ்தானங்களிலிருந்து திசாநாதனுகிய சந்திரனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானங்களிலிருந்தால் சுகசவுக்கியமும், திரவியலா பமும் கிடைக்கும் சுக்கிரன் திசாநாதனுகிய சந்திர னுக்கு மறைவு ஸ்தானத்தி லிருந்தாலும் லக்கின ஜீவன் பாக்கிய குடும்ப ஸ்தான ராசியில் அஸ்தமன மாயிருந்தாலும் தீராகவலையும் சஞ்சலமும் வறுமை யும் உண்டாகும்.

## சந்திரதிசையில் சூரியபுத்தி 6-மாதம்

சூரியன் திசாநாதனுகிய சந்திரனுக்கு கேந்திர கோண திரிகோணஸ்தானத்திலிருந்து சிம்மராசியில் ஆக்ஷிபெற்றிருந்தால் பலவிதமான நன்மையும், திர வியலாபமும், பிரபுக்கள் சகாயமும் உத்தியோகவிர்த் தியும், வியாபாரலாபமும் கிடைக்கும். ஆனுல், திசா நாதனுகிய சந்திரனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந் தும் பகை நீசஸ்தானத்தி லிருந்தால், வறுமையும், கவலையும், கஷ்டமும் பொருந்தியிருக்கும்.

சீஷன்:—குருநாதா! தாங்கள் உபதேசித்தவை யனைத்தும் கவனித்தேன். இனி செவ்வாய் திசை யில் நடக்கும் ஒவ்வொரு புத்திநாதர்களின் பலன் களையும் விபரமாய்த் தெரிவிப்பீர்.

குரு:—அவ்விதமே தெரிவிக்கிறேன் கவனிப்பாய்.

## செவ்வாய்திசையில் செவ்வாய்புத்தி 4-மாதம் 27-நாள்

செவ்வாய்பகவான் ஆக்ஷி, உச்ச, நட்புஸ்தானங் களிலிருந்து இலக்கினத்திற்கு கேந்திரஸ்தானத்தி லிருந்தால் பூமி, வீடு, நிலம் முதலான லாபத்துடன் கீர்த்தியும், புகழுமுண்டாகும். ஆனால், செவ்வாய் பகை நீசஸ்தானத்திலிருந்து ஜனன லக்கினத்திற்கு மறைவுஸ்தானத்தினும் சனி, ராகு, கேது பார்வை பெற்று மிருந்தால் பலவிதமான கலகமும் இரத்த காயம் சண்டைசச்சரவு முதலான கஷ்டங்களுண்டா கும்.

## செவ்வாய்திசையில் இராகுபுத்தி 1-வருஷம் 18-நாள்

இராகுபகவான் திசாநாதனாகிய செவ்வாய் பகவா னுக்கு கேந்திரஸ்தானங்களிலிருந்து, ஆக்ஷி உச்சமா யிருந்தால் மனோற்சாகம், தைரியம், பொருள் சேர் க்கை முதலான சாமர்த்தியமெல்லாம் பொருந்தி யிருக்கும் மறைவு ஸ்தானமாகி ஜனன லக்கினத் திற்கு விரயஸ்தானத்திலிருந்து சனியன் பார்வை பெற்றால் வறுமை, பிணி, சத்துருபயம், பயங்கர மான கஷ்டங்களெல்லாம் தோன்றும்.

## செவ்வாய்திசையில் குருபுத்தி
## 11-மாதம் 6-நாள்

குருபகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திர திரி கோணஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய செவ்வாய் பகவான் பார்வைபெற்றிருந்தால் பகவத்பக்தி தீர்த்த யாத்திரை திருவிழாகாக்ஷி லாபம் பெரியோர் சாக வாசம் முதலான நல்லபலன் கிடைக்கும். ஆனல், பகை நீசஸ்தானத்திலிருந்தால் மனோவிசாரம் மனோ துக்கம் கஷ்டம் கவலையும் பொருந்தியிருக்கும்.

## செவ்வாய்திசையில் சனிபுத்தி
## 1-வருஷம் 1-மாதம் 9-நாள்

சனிபகவான் திசாநாதனுகிய செவ்வாய் பகவா னுக்கு கேந்திரஸ்தானத்திலும், நட்பாக்ஷி உச்சஸ்தா னத்திலுமிருந்தாலும் கீர்த்தி, மனோற்சாகம், தைரி யம், திரவிய லாபமுந் பொருந்தியிருக்கும். ஆனல், சனிபகவான் இலக்கினத்திற்கு மறைவுஸ்தானத்தி லிருந்தாலும், திசாநாதனுக்கு மறைவுஸ்தானத்தி லிருந்தாலும், பலவிதமான கலகமும் கலவரமும் வறுமையும் பித்தஉஷ்ணமும்ஜுரவியாதியும் பொருந் திய கஷ்டமெல்லாந் தோன்றும்.

## செவ்வாய்திசையில் புதன்புத்தி
## 11-மாதம் 27-நாள்

புதபகவான் ஜனனலக்கினத்தின் கோணதிரிகோ ணஸ்தானத்தில் ஆக்ஷி, உச்சம், நட்புபெற்றும், திசா நாதனுகிய் செவ்வாய் பகவானுக்கு கேந்திராதிபதி யாயிருந்தால் வித்யாபி விருத்தி, வியாபார லாபம்

புத்திரபாக்கியம், பந்துக்கூட்டம், திரவியலாபம் முதலான நல்ல பலன்க ளுண்டாகும். திசாநாத னுக்கு மறைவுஸ்தானத்தி லிருந்தால் புத்திமபக்கம், சித்தப்ரமை, வறுமை முதலான பிணி பயங்கரமான கஷ்டமாயிருக்கும்.

## செவ்வாய்திசையில் கேதுபுத்தி
## 4-மாதம் 27-நாள்

கேதுபகவான் ஜனன லக்கினத்திற்கு மறைவு ஸ்தானத்திலிருந்து சனிபார்வைபெற்று, திசாநாதனு கிய செவ்வாய்பகவானுக்கு சத்துருஸ்தானத்திலிருந் தால் இரத்தகாயம், அக்கினி, விஷம், கலகங்களால் கண்டங்களும் நஷ்டமுந்தோன்றும், திசாநாதனுக்கு கேந்திரஸ்தானத்தி லிருந்து ஜனன லக்கினத்திற்கு 3-6-11-ம் ஸ்தானத்தி லிருந்தால், சத்துருஜெயம், பகவத்பக்தி திரவியலாபமும் கிடைக்கும்.

## செவ்வாய் திசையில் சுக்கிரபுத்தி
## 1-வருஷம் 2-மாதம்

சுக்கிரபகவான் ஜனன லக்கினம் வாக்கு சுக ஸ்தானம் கோணம் திரிகோண ஸ்தானத்தில் நட்பு, ஆக்ஷி உச்ச ஸ்தானத்திலிருந்து, திசாநாதனுக்கு கேந்திர ஸ்தானத்தி லிருந்தால், சத்துருஜெயம் சினேகிதர்சேர்க்கை பந்துக்கூட்டம் களத்திரலாப மும் கிடைக்கும். ஆனால், திசாநாதனாகிய செவ்வாய் பகவானுக்கு சுக்கிர பகவான் மறைவுஸ்தானத்தி லிருந்தால் பலவித கஷ்டமும் வறுமையும் உண்டா கும்.

## செவ்வாய் திசையில் சூரியபுத்தி 4-மாதம் 6-நாள்

சூரியபகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திர ஸ்தானம் நட்பு, ஆக்ஷி, உச்ச, ஸ்தானங்களிலிருந்து திசாநாதனாகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால், வியாபார விருத்தி, உத்தமர் சேர்க்கை; உத்தியோகவிருத்தி, திரவியலாபம், தானதர்ம பரோபகாரஞ்செய்யும் நன்மையெல்லாம் கிடைக்கும். ஆனால், சூரியன் திசாநாதனுக்குமறைவு ஸ்தானத்திலிருந்து சனி, இராகு, கேது, பார்வை பெற்று, பகைநீச ஸ்தானத்தி லிருந்தால் வறுமையும், கவலையும், உஷ்ண வியாதியும், கலவரமும், கஷ்டமுந் தோற்றும்.

## செவ்வாய்திசையில் சந்திரபுத்தி 7-மாதம்

சந்திரபகவான் ஜனன லக்கினத்தின் லக்கினம் கேந்திரம், கோணம், திரிகோண ஸ்தானத்திலிருந்து திசாநாதனாகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திர ஸ்தானங்களி லிருந்தால் ஆபரணாதிகளும், வஸ்திர சம்பத்தும் திரவியலாபமும் உத்தியோகவிர்த்தியும் வியாபார லாபமும் கிடைக்கும், ஆனால், சந்திரபகவான் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால், கஷ்டமும் கவலையும் பலவிதமான நஷ்டமும் உண்டாகும்.

சீஷன்:—குருநாதா! இராகுதிசை 18-வருஷம் வரையிலும் வரும் புத்திநாதர்களின் பலன்களையும் விபரமாய்ப் புகல்வீர்.

குரு.—சிஷ்யா உனது விருப்பத்தின்படியேசொல்லுகிறேன் கவனிப்பாய்.

## இராகுதிசையில் இராகுபுத்தி

### 2-வருஷம் 8-மாதம் 12-நாள்

இராகு பகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திர ஸ்தானத்தி லிருந்தால் தனது சுயபுத்தியில் பயங்கர மில்லாமல், கோட்சாரபலனை அனுசரித்து பொது வாய் சுபத்தில் நடக்கும். ஆனால், இலக்கினத்திற்கு 6-8-12-ம் வீட்டிலிருந்தால், சுயபுத்தி முழுமைக்கும் கஷ்டமும், கவலையும், பந்துமித்திரர் கலகமும், மனைவியின்மீது வெறுப்பும், பூமி, வீடு கை விட்டுப் போகுதல் முதலான கவலையும் தேசாந்திரியாய்த் திரியும், கஷ்டமும் பொருந்தியிருக்கும்.

## இராகுதிசையில் குருபுத்தி

### 2-வருஷம் 4-மாதம் 24-நாள்

குருபகவான் ஜனன லக்ன குடும்பஸ்தான கோண திரிகோண நட்பு, ஆக்ஷி, உச்சஸ்தானங்களிலிருந்து திசாநாதனாகிய இராகுபகவானுக்கு கேந்திரஸ்தா னத்தி லிருந்தால் சரீராரோக்யம், ஸ்திரீசேர்க்கை சுகசவுக்கியம், கீர்த்தி திரவியலாபமும் கிடைக்கும். ஆனால், குருபகவான் 3-8-12-வது ஸ்தானத்தி லிருந்து, திசாநாதனும் தானிருக்கும் ஸ்தானம் பகை நீசஸ்தானமாகவு மிருந்தால் மனபயங்கரம் உத்தியோக ஸ்தானத்தில் கலகம் வியாபாரத்தில் நஷ்டமும் பகையும் பந்துமித்திரர் மனவெறுப்பும் யாத்திரை வாசமும் தரித்திர ஹிம்சையும், பலவித மான கஷ்டநஷ்டமும் பொருந்தி யிருக்கும்.

## இராகுதிசையில் சனிபுத்தி

### 2-வருஷம் 10-மாதம் :5- நாள்

சனிபகவான் ஜனன லக்கினத்தின் 3-6-11-ம் ஸ்தானத்தில் நட்பு, ஆக்ஷி, உச்சஸ்தானுதிபதியா யிருந்து திசாநாதனுகிய இராகுபகவானுக்கு கேந் திரஸ்தானத்தி விருந்தால் மனதைரியமும் நல்லோர் சேர்க்கையும் இரும்பு கறுப்பு தான்யாதிகள் விய பாரமும், , திரவிய லாபமும், வீரத்தன்மையான உத்தியோகமும், சாமர்த்தியமும், பொருந்தியிருக் கும். ஆனல், சனிபகவான் பகை, நீசஸ்தானத்தி விருந்து திசாநாதனுக்கும் மறைவுஸ்தானத்தி விருந் தால் பலவிதமான துன்பமும், துயரமும், வறுமை யும், கஷ்டமும் கவலையும் தோன்றும்.

## இராகுதிசையில் புதன்புத்தி

### 2-வருஷம் 6-மாதம் 18- நாள்

புதபகவான் சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்து திசாநாதனுகிய இராகுபகவானு டன் சம்பந்தமானுலும் பார்வை பெற்றாயினு மிருந் தால் பலவிதமான கலகமும், கஷ்டமும், கவலையும், பகையும், வியாதியும் மனபயங்கரமுமா யிருக்கும். ஆனல், புதபகவான் ஆக்ஷி, உச்சநட்பு ஸ்தானத்தி விருந்து திசாநாதனுக்கு கேந்திர திரிகோண ஸ்தா னத்தி விருந்தால் வியாபார விருத்தியும் உத்தியோக மேன்மையும், திரவிய லாபமும், புத்திர சம்பத்தும் புகழும் கீரத்தியும் பெருமையும் உண்டாகும்.

## இராகுதிசையில் கேதுபுத்தி
## 1-வருஷம் 18-நாள்

கேதுபகவான் மேஷம் ரிஷபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரராசியிலிருந்து புதன் குரு சுக்கிரன் பார்வைபெற்றால் வித்யாலாபம் சாஸ்திர விசாரணை மகான்கள்தரிசனம் வியாபாரவிருத்தி திரவியலாபம் உத்தியோகசம்பத்து முதலானவை யனைத்தும் கிடைக்கும். ஆனால், கேதுபகவான் உதயலக்கினத்திற்கு விரயஸ்தானத்திலிருந்து சூரியனும் சந்திரனும் சம்பந்தமானாலும் பார்வை பெற்றாலும் பலவிதமான துன்பமும் தொல்லையும் கவலையும் கஷ்ட நஷ்டங்களுண்டாகும்.

## இராகுதிசையில் சுக்கிரபுத்தி
## 3-வருஷம்

சுக்கிரபகவான் லக்கினம், வாக்குஸ்தானம், கேந்திர திரிகோண லாபஸ்தானத்திலிருந்து திசாநாதனாகிய இராகுபகவானுக்கு கேந்திரஸ்தானத்தி லிருந்தால் சுகசவுக்கியம் ஸ்திரீகள் சேர்க்கை வியாபார விருத்தி உத்தமர் சேர்க்கை உத்தியோக சம்பத்து திரவியலாபம் முதலான நன்மையுண்டாகும். ஆனால், சுக்கிரபகவான் ஜனன லக்கினத்திற்கு 6-8-12-ம் ஸ்தானத்திலும் கன்னியாராசியிலுமிருந்து திசாநாதனுக்கு ரோகஸ்தானம் விரயஸ்தானத்தி லிருந்தால் பலவிதமாகிய துன்பமும் துயரமும் ஸ்திரீகளின் பகையும், விபசாரதோஷத்தினால் வியாதியும், கஷ்டமும் கவலையும் பொருந்தியிருக்கும்.

## இராகுதிசையில் சூரியபுத்தி
## 10-மாதம் 24-நாள்

சூரியபகவான் ரோகஸ்தானம், ஆயுள் ஸ்தானம், விரயஸ்தானம், துலாம், மகரம், கும்பராசியி லிரு

ந்து திசாநாதனாகிய இராகு பகவான் பார்வைபெற்றாலும், சம்பந்தமா யிருந்தாலும் பலவிதமான துன்பமும், துயரமும், சண்டைசச்சரவும், தரித்திரஹிம்சையும், கஷ்டமும் கவலையுமாய் அழுகையுந் துக்கமும் தேச சஞ்சாரமும், விஷபயமும், அக்கினிபயமுமாயிருக்கும். ஆனால், சூரியபகவான் நட்பு, ஆக்ஷி உச்சஸ்தானத்திலிருந்து குரு, புதன், சுக்கிரர் பார்வைபெற்றாலும், சம்பந்தமாயிருந்தாலும், திசாநாதனுக்கு மறைவுஸ்தானத்திலிருந்தாலும் தானிருந்த ஸ்தானாதிபத்யத்திற் கிசைந்த சுப பலன்களாகிய பந்து மித்திரசேர்க்கை, வியாபார விருத்தி, திரவிய லாபம், உத்தியோக சம்பத்து, சரீரசவுக்கியம், முதலான நன்மையே உண்டாகும்.

## இராகுதிசையில் சந்திரபுத்தி 1-வருஷம் 6-மாதம்

சந்திரபகவான் லக்ன குடும்பஸ்தான கேந்திர திரிகோண இலாபஸ்தானத்திலிருந்து, திசாநாதனாகிய இராகுபகவானுக்கு மறைவுஸ்தானத்திலிருந்துக்கொண்டு குரு புதன் சுக்ரன் பார்வைபெற்று நட்பாக்ஷி உச்சஸ்தானத்தி லிருந்தால் வித்தியாலாபம் வியாபாரலாபம், திரவியலாபம், பந்துஜனகூட்டம், ஸ்திரீகள் சேர்க்கை, மனோற்சாகம், புத்திரசம்பத்து முதலான நற்பலன்கள் உண்டாகும். ஆனால், சந்திரபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனாகிய ராகு சம்பந்தமும் பார்வைபெற்றாலும் சிறைகலகம் சத்துரு சேர்க்கை, கைப்பொருள் நஷ்டம், வியாபார நஷ்டம், உத்தியோக விரோதம் முதலான பலவிதமாகிய கஷ்டத்தை யுண்டாக்கும்.

## இராகு திசையில் செ
### 1-வருஷம் 18-

செவ்வாய் பகவான், விருச்சி
ராசியிலிருந்தும் உதயலக்கினத்தி
ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகி
னுக்கும் கேந்திர ஸ்தானத்திரு
சத்துரு ஜெயம் வியாபாரவிர்த்தி
உத்தியோக சம்பத்து முதலாகிய
கிடைக்கும் ஆனல், செவ்வாய்ப
தானத்திலிருந்து திசாநாதனாகி
மானுலும் பார்வை பெற்றாலும்
நஷ்டங்களும், சத்துருவிரோத
தரித்திர இம்சையும் அன்ன
சமுமா யிருக்கும்.

சீஷன்:—சுவாமி குருநா
உபதேசித்தவை யனைத்தும்
ஆனல், தேவகுருவாகிய வி
நடுக்கும் ஒவ்வொரு புத்
பலன்களையும் விபரமாய்ப் புக

குரு:—சரி! அவ்விதமே
கின்றேன் கவனமாய்க் கேட்

## குருதிசையி
### 2-வருஷம் 1-ம

குருபகவான் நட்பாக்ஷி
குடும்ப கோண திரிகோ

மபாஷணையாகிய

...யோலாபம், புத்தி சாதுர்யம்,
உத்தம சிநேகிதர் சேர்க்கை,
..., திரவியலாபம், வியாபார
...நன்மைகளும், சரீராரோக்கியம்,
...ானுஷ்டான சுகவாழ்வும் பெரு
...ஜனன லக்கினத்திற்கு மறைவு
...ஸ்தானத்திலிருந்து சனி, ராகு
...னலும், பார்வை பெற்றாலும்,
...ம், வியாபர நஷ்டம், உத்யோக
..., சித்தப்பிரமை, மனவிசாரம்,
...ன்னவஸ்திர பஞ்சம் வறுமை
...பரமுமா யிருக்கும்.

## ...ில் சனிபுத்தி
## ...மாதம் 12-நாள்

...ஸ்தானத்திலிருந்துசூர்யன்
...திசாநாதனுகிய குருபகவா
...இ விருந்தால், கைப்பொருள்
...ஞ்சலம், திருடர்களாலும்,
...ய நஷ்டம், மனசஞ்சலம்,
...நஷ்டம், உத்தியோகத்தா
...ஸ்திர பஞ்சம், கடன்காரர்
...ஷ்டமெல்லாம் விளங்கும்.
...பம், மகரம், துலாராசியி
... பார்வைபெற்றும், திசா
...காண ஸ்தானத்தி லிருந்
...யாபாரவிர்த்தியும், உத்தி
...பமும் கிடைக்கும்.

## குருதிசையில் புதன்புத்தி
## 2-வருஷம் 3-மாதம் 6-நாள்

புதபகவான் ஜனனலக்ன வாக்குஸ்தானகோண திரிகோண லாபஸ்தானத்தில், ஆக்ஷி, உச்ச, நட்பு ஸ்தானதிபதியாயிருந்து திசாநாதனாகிய குருபகவானுக்கு கோண, திரிகோண, ஸ்தானத்தி லிருந்தால் வித்தை, விவேகம், புத்தி, சாதுர்யம், பந்து மித்திரர் சேர்க்கை, மனையாள், சுகானந்தம், புத்திரசம்பத்து, வியாபாரலாபம். உத்தியோகவிர்த்தி திரவிய லாபமும் கிடைக்கும். ஆனால், புதபகவான் இலக்கினத்திற்கு ஆறெட்டு பனிரெண்டாமிடத் ததிபதியாய் பகை நீசஸ்தானத்திலிருந்து, திசாநாதனுக்கு மறைவுஸ்தானத்தி லிருந்தால், மறதி, சோம்பல், விசேஷநித்திரை, வியாபாரநஷ்டம், உத்தியோக ஸ்தான கலகம், திரவிய நஷ்டம், பந்து ஜனங்களின் பகை முதலான கஷ்டங்களெல்லாம் விளைவிக்கும்.

## குருதிசையில் கேதுபுத்தி
## 11-மாதம் 6-நாள்

கேதுபகவான் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரராசியிலிருந்து, குருசுக்ரன்பார்வை பெற்றுஜனன லக்கினத்திற்கு ஆறுமிடத்திலிருந்தாலும், கேந்திரஸ்தானத்தி லிருந்தாலும், திசாநாதனாகிய குருபகவானுக்கு திரிகோண ஸ்தானத்திலிருந்தால், தெய்வபக்தி, மஹான்கள் தரிசனம், தேவாலயபூஜை விரதானுஷ்டானம், வித்யாலாபம், திரவியலாபம் முதலான நன்மையனைத்துங் கிடைக்

கும். ஆனல், கேது பகவான், சனி, செவ்வாய் பார்வைபெற்று திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்தி லிருந்தால் பல்விதமான மனச்சஞ்சலம், கைப் பொருள் நஷ்டம், திருடர்பயம், வறுமை, பிணி முதலான கஷ்டமும் கவலையுமா யிருக்கும்.

## குருதிசையில் சுக்கிரபுத்தி
## 2-வருஷம் 8-மாதம்

சுக்கிரபகவான் ஜனனலக்கின சுகபஞ்சம பாக்கிய இலாபஸ்தானத்தில் நட்பாக்ஷி உச்சமாயிருந்தும் திசாநாதநாகிய குருபகவானுக்குக் கோண திரிகோண ஸ்தானத்திலிருந்தால் ஞானம், கல்வி வித்யாபிவிருத்தி உத்தமர் சேர்க்கை, மனைவி மைந்தர் சுகவாழ்வு, கீர்த்தி வியாபாரலாபம் பொன் பொருள் பூஷணுதிக ளனைத்தும் பொருந்தி இருக்கும். ஆனல் சுக்கிர பக வான். சஷ்டாஷ்டம் விரயஸ்தானத்தில் பகை நீச மாயிருந்து, சனி, இராகு, கேது சம்பந்தமும் திசா நாதனுக்கு மறைவுஸ்தானத்திலும் மிருந்தால் மந்த புத்தி ஞாபகக்குறைவு பந்துமித்திரர் பகை சண்டை சச்சரவு, வழக்கு வியாஜ்ஜியம் திரவிய நஷ்ட முத லான கஷ்டமெல்லாம் விளைவிக்கும்.

## குருதிசையில் சூரியபுத்தி
## 9-மாதம் 18-நாள்

சூரியபகவான் நட்பாக்ஷி உச்சனுயிருந்து கேந்திர ஸ்தானுதிபதியாய் திசாநாதனுக்கு கோணத்திரி கோண ஸ்தானங்களி லிருந்தால், வித்யாபிவிருத்தி, கீர்த்தி, ஞாபகசக்தி. வீரத்தன்மை, வியாபார

விருத்தி, உத்தியோகமேன்மை, சம்பத்தும் திரவிய லாபமும் கிடைக்கும் ஆனால், சூரியபகவான் பகை நீசஸ்தானத்தி லிருந்து சனி, ராகு, கேது, பார்வை பெற்று திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந் தால் மனஸ்தாபமும், நஷ்டமும், கவலையும், துன்ப மும்துயரமும் அலைச்சல்பட்டலைபச்செய்யும். ஆனால் சூரியன் சத்துருஸ்தானத்தி லிருந்தால் எத்தகைய துன்பத்திற்கும் அஞ்சாமல் தைரியஸ்தராய் விளங் கும்படியாகச் செய்யும்.

## குருதிசையில் சந்திரபுத்தி

### 1-வருஷம் 4-மாதம்

சந்திரபகவான் ஜனனலக்கின குடும்பஸ்தான கேந் திரகோணாதிபதியாய் திசாநாதனுக்கு நட்பாக்ஷி உச்சனாயிருந்தால் வித்யாபிவிருத்தி குரு உபதேசம் குடும்ப சவரக்ஷணை அதிகாரம் வியாபார விருத்தி உத்தியோகசம்பத்து, திரவியலாபம் சுகசவுக்கியமெல் லாம் பொருந்தி யிருக்கும், சந்திரபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து குருபகவானுக்கு ஆறெட்டு பனிரெண்டா மிடத்திலிருந்தால், பலாரிஷ்டம், கண்டாதிகண்டம், கலகம், வறுமை, துன்பம், துயரம், கவலை, அலைச்சல், பகைவரால் துன்பம், வழக்கு வியாஜ்ஜிய முதலான கஷ்டமெல்லாந் தோன்றும்.

## குருதிசையில் செவ்வாய்புத்தி

### 11-மாதம் 6-நாள்

செவ்வாய்பகவான் ஜனனலக்னத்துக்கு அஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசஸ்தானத்தி லிருந்து

திசாநாதனுகிய குருபகவானுக்கு மறைவுஸ்தானத்திலிருந்தால் பலவிதமான அலைச்சலும், ஊஷ்ண வியாதி, சொரி, சிரங்கு, சீதபேதி முதலான வியாதிகளும் பொருந்தி பலஹீனப் படுத்துவதுடன், சத்துருபயம், வழக்கு வியாஜ்ஜியத்தினுல் கைப்பொருள் நஷ்டம், மனே, வீடு கைவிட்டுப்போவது முதலான கஷ்டத்தைவிளைவிக்கும். ஆனுல், செவ்வாய் பகவான் ஜனனலக்கினத்திற்கு கேந்திராதிபதியாய் நட்பாக்ஷி உச்சனுயிருந்து திசாநாதனுக்குக் கேந்திராதிபதிய யிருந்தால், வித்யாபிவிருத்தி ஞாபகசக்தி, பகவத் பக்தி, கல்வி, ஞானம், அறிவு ஆலோசனே, வியாபாரலாபம், வீடுவாங்குதல், திரவியலாபம் சரீராரோக்கியம், மனைவி மைந்தர் சுகவாழ்வு, கீர்த்தி பெருந்தன்மையான புத்திசாதுர்யமனைத்தும் பொருந்தி யிருக்கும்,

## குருதிசையில் இராகுபுத்தி

## 2-வருஷம் 4-மாதம் 24-நாள்

இராகுபகவான் மேஷம், ரிஷபம், கடகம், விருச்சிகம், மகரராசியிலிருந்து திசாநாதனுகிய குருபகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் கல்வி மன உற்சாகம் அறிவு ஆலோசனை விளக்கம், ஞாபக சக்தி, திரவியலாபம், வியாபாரலாபம், உத்தியோக சம்பத்து பெரியோர்நேசம் பந்துஜனக் கூட்டம், மனைவி, மைந்தர் சுகவாழ்வு சரீர சவுக்கிய மனோற்சாகமனைத்தும் பொருந்தியிருக்கும். ஆனுல், இராகு பகவான் பகை நீசஸ்தானத்தி லிருந்தால் பலவிதமான கஷ்டநஷ்டமும், கவலையும் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமும், பயங்கரமும் சத்துருவிரோதமும் பொருந்தி யிருக்கும்.